அன்றன்றுள்ள அப்பம் வழங்கும்

# ஒலிவமரக் கன்றுகள்

ஏப்ரல் – 2024 | மரம் – 3 | கன்று – 4 | ஆண்டு சந்தா ரூ.250/- | தனிப்பிரதி ரூ.25/- | ஆயுள் சந்தா ரூ.2500/-




ஆசிரியர். ஜோசப் ஆஸ்போர்ன் ஜெபத்துரை

# மனம் விட்டு உங்களுடன்...

## ஒலிவமரக் கன்றுகள் இதழின் வாசகர்களே!
## ஆதரவாளர்களே! குழந்தைகளே!

சுட்டெரிக்கும் கோடை வெயில் எட்டிப் பார்க்கும் காலமிது. உங்கள் உடல்நலனில் அக்கறை கொள்ளுங்கள். கோடை காலத்தில் சூரியன் விரைவாகவே உதிக்கத் தொடங்கினாலும் உங்களுக்கு வெளிச்சமாய் தேவன் இருக்கும் போது உங்கள் வாழ்வின் இருள் விலக சூரியன் வரத் தேவையில்லை. இயேசு மட்டும் போதும்.

கோடை கால விடுமுறை நாட்களை பயனுள்ள வகையில் உங்கள் தனித்திறன்களை வளர்த்தெடுக்கும் வாய்ப்புகளை நழுவ விட வேண்டாம். கிடைக்கும் நேரங்களில் உறவினர்களையும் நண்பர்களையும் சந்தித்து உறவுகளை கட்டியெழுப்புங்கள். காரணம் கண்ணால் காண்கின்ற மனிதர்கள் மூலமே காணப்படாத தேவனின் அன்பின் மகத்துவத்தை நம்மால் வெளிப்படுத்த முடியும். உங்களை உற்சாகப்படுத்தும் ஆலோசனைகளை இவ்விதழில் எழுதியுள்ளேன்.

பொருத்தமானதைச் செய்வதே நல்ல ஆளுமை. ஆளுமையில் நேர்மை, நாணயம், நல்ல நோக்கம் அமைந்திருக்க வேண்டும். இதைத்தான் வேதத்தில் நீங்கள் கற்கிறவர்களாக மட்டுமல்ல, அதன்படி நடக்கிறவர்களாகவும் இருங்கள் என்பதாக வாசிக்கிறோம்.

வறுமை, கல்வியறிவின்மை, வேலை வாய்ப்பின்மை ஆகியவை குற்றங்களுக்கு வழிவகுக்கும். எந்த விதமான கட்டுப்பாடுமின்றி அவரவர் தம் விருப்பத்திற்கேற்ப செயல்பட அனுமதிக்கும் சமூக அரசியல் அமைப்பால் சட்டம் ஒழுங்கு பெரிதும் பாதிக்கும். குடும்பத்திலும், சமுதாயத்திலும் ஒழுக்கச்சூழல் சீராக அமைவது ஒருவரது ஆளுமைப் பண்பு சீரோடும் சிறப்போடும் விளங்க உதவுகிறது. இச்சூழலில் நாம் கிறிஸ்துவால் கிரயத்திற்கு கொள்ளப்பட்டவர்கள் என்பதை மறவாதிருந்து நமது எஜமானாயிருக்கும் இயேசப்பாவின் அன்பு வழியில் நாம் நடக்க வேண்டும்.

உங்களுக்காக ஜெபிக்கிறேன். உங்கள் கோடை கால பயணங்கள், பயிற்சி வகுப்புகள், உறவு சார்ந்த சந்திப்புகள் அனைத்தும் இனிமையாக அமைய கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துகிறேன்.



அன்புடனும், அக்கறையுடனும்:

*அங்கிள்.* **J. ஜோசப் ஆஸ்பார்ன் ஜெபத்துரை**

# மருதோன்றி

என் நேசர் திராட்சத்தோட்டங்களில் முளைக்கும் **மருதோன்றிப்** பூங்கொத்து! (உன்னதப்பாட்டு 1:14).

மருதோன்றி என்பதுதான் தாவரத்தின் இயற்பெயர். மருதாணி என்பது பேச்சு வழக்கு தமிழில் திரிபுப் பெயரானது. மருதாணியை பாரசீக மொழியில் Henna என்றழைப்பர். இலக்கியத் தமிழில் மருதோன்றி, ஐனாஇலை, ஐவனம், அழவணம் ஆகிய பெயர்களாலும் மருதாணி தாவரம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது புதர்ச்செடியாகவோ, குறுமரமாகவோ அடர்த்தியான கிளைகளுடன் கூடிய தாவரமாகும். மருதாணி இலைகள் ஈட்டி வடிவமானவை. நான்கு கோணங்களுடன் எதிர் எதிராக 2 முதல் 3 செ.மீ நீளத்தில் அமைந்திருக்கும்.

இலைகளும் பூக்களும் துவர்ப்புச் சுவை கொண்டது. வெண்மை, இள மஞ்சள் அல்லது இளஞ்சிவப்பு நிறமான மருதாணி தாவரத்தின் மலர்கள் அளவில் சிறியதெனினும் (நறு)மணம் கொண்டவை. பெரிய நுனிக்கொத்துகளில் பூக்கள் தொகுப்பாகக் காணப்படும். இவற்றை பூ மஞ்சரி என்று அழைப்பர். மிளகு போன்ற அளவில் காணப்படும் மருதாணி காய்களின் உள்ளே முளைப்புத் திறனற்ற (Pseudo seeds) போலிவிதைகள் இருக்கும். காய்கள் முற்றியதும் அவை வெடித்து விதைகளை பரவச் செய்கின்றன. இத்தாவரங்கள் அழகுக்காகவும், மருத்துவ உபயோகங்களுக்காகவும் பொதுவாக வீட்டுத் தோட்டங்களில் வளர்க்கப்படுகின்றன.



உலகில் பெரும்பாலானோர் தலைமுடிக்கு நிறமூட்டியாக (Hair dye) மருதாணியை பயன்படுத்துகின்றனர். பலவித வேதிக்கலவை முறைகள் (Synthetic components) மூலம் விரும்பிய நிறத்துக்கு ஏற்ற வணிக ரீதியான மருதாணிப்பொடிகள் கிடைக்கின்றன. வணிக மதிப்பு இருப்பதால் தொழில்ரீதியில் மருதாணி வளர்ப்பு விவசாயத்திலும், மதிப்பு கூட்டப்பட்ட (value added henna product) ஏற்றுமதியிலும் பாகிஸ்தான் தான் உலக அளவில் முதன்மை இடத்தை பிடித்துள்ளது.

### வரலாற்றில் மருதாணி:

★ கி.பி. 30ம் ஆண்டு எகிப்தின் அரியணையில் ஒய்யாரமாய் அமர்ந்துள்ள எகிப்தின் ராணி கிளியோபாட்ராவின் கை கால்களின் விரல் நகங்கள் சிவப்பாய் உள்ளதையும், அவளின் தலைமுடியும் மிக இலேசான பொன்னிறத்தில் பளபளவென மின்னுகிறதையும் கண்டிருப்போம். இதற்கு பின்னணியில் மருதாணியின் கைங்கரியம் தான் உள்ளதென வரலாற்று நிபுணர்கள் கருத்திடுகிறார்கள்.

★ எகிப்திய, ரோமாபுரி அரசிகள், அரச குடும்பத்து பெண்கள் மற்றும் செல்வந்த குடும்ப பெண்களும் தங்களை அழகூட்டிக் கொள்ளும் இயற்கையான கலவையாக மருதாணியை பயன்படுத்தியதை பாரசீகத்தில் கிடைக்கப்பெற்ற ஆதாரங்கள் தெரிவிக்கின்றன.

★ முகலாய மன்னர்கள் தம் பட்டத்து குதிரைகளின் காலின்கீழ் பாதியை மருதாணியால் செந்நிறமாக்கி அழகு பார்த்தனர். குதிரைகளின் கால்களில் சிவப்பு பூட்ஸ்களை/ சாக்ஸ்களை மாட்டினாற்போல் இன்றும் குதிரைகளின் கால்களை அத்தகைய மருதாணி வைக்கும் மரபு தொடர்கிறது.

★ இன்றும் மேற்கத்திய நாடுகளில் வசிப்போர் தம் தலைமுடியை, இயற்கையான முறையில் வண்ணப்படுத்த மருதாணிதான் பெருமளவில் பயன்படுத்துகின்றனர். சில புதுமை விரும்பிகளால் தலை‘மை’யான இடத்தையும் மருதாணி பிடித்துள்ளது.

**வண்ணமாக்கி மகிழ்விக்கும் மருதாணியால் ஏற்படும் நன்மைகள்:**



மருதாணி பூக்களைச் சேகரித்து உலர்த்தி தலையணை போல் செய்து தூங்குவதற்கு தலையணையாக பயன்படுத்தினால் ஆழ்ந்த தூக்கம் உண்டாகும் (இதைத்தான் தலையணை மந்திரம் என்று சொல்வார்கள் என்று நினைக்கிறேன்).

மருதாணியின் இலைகளானது கை, கால்களில் தோன்றும் சேற்றுப் புண்கள், அழுக்குப்படை, கட்டி மற்றும் பித்தவெடிப்புகள் ஆகியவற்றை குணமாக்கும். முடிவளர்ச்சிக்கும், பொலிவிற்கும் உதவும். நிம்மதியான தூக்கத்தை வரவழைக்கும். கண்களைக் குளிர்ச்சியாக்கும். நகச்செ சாத்தை நீக்கி, நகங்களின் வலிவிற்கும், பொலிவிற்கும் உதவும். கால்எரிச்சல், கால்ஆணி ஆகியவற்றைக் குணமாக்கும். தீக்காயம், சிலவகை தலைவலிகள் ஆகியவற்றைக் குணமாக்க உதவும். ஆரம்ப நிலையிலான பித்த இளநரை நீக்க உதவும்.

மருதாணி வேர், நோய் நீக்கி உடலைத் தேற்றும். மருதாணி இலைகளை அரைத்து பற்றுப் போட்டால் தலைவலி குணமாகும். மருதாணி இலைகளை மைய அரைத்து அடை போன்று தட்டையாகத் தட்டி நிழலில் உலர்த்திக் கொள்ள வேண்டும். இதனை தேவையான அளவு தேங்காய் எண்ணெயில் போட்டு 21 நாள்கள் வெயிலில் வைத்து பின்னர் வடிகட்டி பத்திரப்படுத்த வேண்டும். இந்த எண்ணெயைத் தலையில் தடவி வரவேண்டும். இதனால் இளநரை மாறுவதுடன் கண்கள் குளிர்ச்சி அடையும். நல்ல தூக்கம் உண்டாகும்.



மருதாணி இலையை அரைத்து பசையாக்கி பாதிக்கப்பட்ட இடத்தில் பூச கொப்புளங்கள் தீக்காயங்கள் குணமாகும். சிறிதளவு மருதாணிக் கொழுந்தை நீரில் இட்டு ஊற வைக்க வேண்டும். 1 மணி நேரம் ஊறிய பின்னர் இந்த நீரைக் கொதிக்க வைத்து கஷாயம் செய்து கொள்ள வேண்டும். இந்த கஷாயத்தால் வாய் கொப்பளிக்க வாய்ப்புண் மற்றும் தொண்டைப்புண் தீரும்.

மருதாணி இலைகளை அரைத்து பாதங்களில் வைத்துக் கட்டுவது சிறந்த முறையாக பாரம்பரிய மருத்துவத்தில் இன்றும் இருந்து வருகின்றது. மருதாணி விதை எண்ணெயை உடலில் தடவ உடல் எரிச்சல் குணமாகும். மருதாணி இலை மற்றும் மலர்கள் குஷ்ட நோய்க்கு மருந்தாகப் பயன்படுகின்றன.

பொறுப்புத் துறவல் (Disclaimer): மருதாணி இலையை அரைத்து தலைக்கு போடலாம். அது சளி பிடித்து இருந்தால் கொஞ்சம் கூடுதல் ஆக வாய்ப்பு இருக்கிறது. மிக்சியில் தேவைக்கு ஏற்ப தண்ணீர் சேர்த்து, அரைத்து அப்படியே தடவிக் கொள்ளுங்கள், இரண்டு மணி நேரம் கழித்து குளித்து விடுங்கள்.

**சொல்லறிவோம்:**

மைலான்ஜி/ மயிலாஞ்சி என்பது மருதாணியை குறிக்க தமிழிலிருந்து உருவான பண்டைய மலையாளச் சொல் ஆகும். இந்த அழகிய தமிழ்ச்சொல் தோன்றிய முறையைக் கீழே காணலாம்.



பை = பசுமை + இலை + ஆசு + இ = பயிலாச்சி. மயிலாஞ்சி என எழுத்து வழக்கில் அழகிய நிறம் தரும் இலை = மருதாணி இலை என பொருள் கொள்ளலாம். கேரளாவில் ஒரு சமூகத்தைச் சார்ந்தவர்கள் திருமண நிகழ்ச்சியின் முந்தைய நாள் மணப்பெண்/ மணவீட்டாருக்கு (பெண்களுக்கு) மருதாணி வைத்து கைகளை அலங்கரிப்பதை விழாவாக கொண்டாடுகின்றனர். இவ்விழாவினை மயிலாஞ்சி என்கின்றனர். வட இந்தியாவில் இதனை மெகந்தி என கொண்டாடுகின்றனர்.

இறுதியாக மற்றுமொரு எச்சரிக்கை: அனைவரையும் வண்ணமாக்கி மகிழ்விக்கும் மருதாணி கோடியில் ஒருவருக்கு ஒவ்வாமை ஆகிவிடும். உலகில் கோடியில் ஒருவருக்குதான் ஒவ்வாமை ஆகிவிடும் என்பது சிலரின் அனுபவமாக கண்டறியப்பட்டுள்ளது.






# அவர் வழி எப்பவும் தனி வழி தான்..

'ராஜாவே.. இது சரியில்லை. ''இவன் யூதருடைய ராஜாவாகிய இயேசு'' என்று பெயர்ப்பலகையில் எழுதியிருக்கிறீர்கள். அப்படி எழுதினால் அவர் உண்மையிலேயே யூதர்களின் ராஜா என்பதை நாம் ஏற்றுக் கொள்வதாகிவிடும். ''யூதர்களின் ராஜா நான்'' என்று எழுத வேண்டும். அப்போது தான் இவன் போலி தீர்க்கத்தரிசி என்பது தெரியும் என்றான்.'

பிலாத்து கோபத்தில் எழுந்தான். 'நான் எழுதியது எழுதியது தான்.. நீர் போகலாம்'. பிலாத்துவின் கோபம் காய்பாவை சட்டென்று பின்வாங்க வைத்தது.

பிலாத்து நம்பினானா! இயேசு தான் உண்மையில் யூதர்களின் ராஜா என்னும் கூற்றை பிலாத்து நம்பினானா? கேள்விகள் காய்பாவைக் கலங்கடித்தன.



சிலுவை மரம் நேராக நிமிர்த்தப்பட்டது!

‘மோசே பாலைவனத்தில் வெண்கலச் சர்ப்பத்தை உயர்த்தியது போல மனுஷகுமாரனும் உயர்த்தப்படவேண்டும்’ இயேசு சொல்லியிருந்த வார்த்தைகள் அவருடைய சீடர்களின் மனதுக்குள் எதிரொலித்தன.

இயேசுவைச் சிலுவையில் அறைந்தபின் கழற்றி வைக்கப்பட்டிருந்த இயேசுவின் அங்கியை யார் சொந்தமாக்குவது என்று படைவீரர்களுக்குள்ளே தர்க்கம். அந்த அங்கி மேலிருந்து கீழ் வரை ஒரே துணியால் உருவாக்கப்பட்டிருந்தது.

‘நான் தான் மூத்த வீரன்.. எனக்குத் தான் இந்த ஆடை வேண்டும்.’

‘நான் தான் இவனை அதிகமாய்த் துன்புறுத்தினேன். எனக்குத் தான் இந்த ஆடை!’

‘இவனை ஆணியில் அறைந்தது நான் தான்... எனக்குத் தான் இந்த ஆடை வேண்டும்’ அவர்கள் தங்களுக்குள் சண்டையிட்டார்கள்.

‘இந்தச் சண்டை முடியப்போவதில்லை. ஒன்று செய்யலாம். நம்முடைய பெயர்களையெல்லாம் எழுதிச் சீட்டுப் போடலாம். யாருடைய பெயர் வருகிறதோ, அவருக்கே இந்த ஆடை... என்ன சொல்கிறீர்கள்?’ ஒருவர் கேட்க, மற்றவர்கள் வேறு வழியின்றி ஒத்துக் கொண்டார்கள்.

‘என் ஆடைகளைத் தங்களுக்குள் பகிர்ந்து கொண்டார்கள். என் உடை மீது சீட்டுப் போட்டார்கள்’ என்று மறைநூலில் எழுதப்பட்டிருந்த வார்த்தைகள் அதைப் பார்த்துக் கொண்டிருந்தவர்களின் உள்ளத்துக்குள் எதிரொலித்தன.

இயேசுவின் வலப்புறமும் இடப்புறமும் இரண்டு கள்வர்கள் சிலுவையில் அறையப்பட்டு தொங்கினார்கள்.

‘தேவாலயத்தை இடித்து, மூன்று நாளைக்குள்ளே கட்டுகிறவனே. இந்த மூன்று ஆணிகளின் கட்டுகளிலிருந்து உன்னை நீயே இரட்சித்துக்கொள்.’

‘பிறரை விடுவித்த மகானே. உன்னை விடுவிக்கத் தெரியவில்லையா?’

‘இப்போது நீ சிலுவையிலிருந்து இறங்கி வா. உன்னை நாங்கள் தேவனாக ஏற்றுக் கொள்கிறோம்.’

சிலுவைக்குக் கீழே இருந்தவர்கள் இயேசுவை நோக்கி இகழ்ந்தார்கள்.

‘பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே’ இயேசுவின் உதடுகள் மன்னிப்பை வேண்டின. கண்கள் சுற்றுமுற்றும் பார்த்தன. எங்கே என் நம்பிக்கைக்குரிய சீஷர்கள்?

அது யார்? யோவானா? அருகில் யாரது? என் சபையைக்கட்டுவேன் என்று நான் உறுதியளித்திருந்த பேதுருவா? எங்கே என் மற்ற சீஷர்கள்? மற்ற ஒன்பது நண்பர்கள் எங்கே? ஒரு நண்பனுக்காக உயிர்கொடுக்க வேண்டாம். அவனுடைய மரணப் பயணத்தில் கூட அருகிலிருக்கப் பயந்து ஓடிவிட்டார்களா? இயேசுவின் பார்வையில் நிராகரிப்பின் வலி.

இயேசுவின் இடப்பக்கத்தில் அறையப்பட்டிருந்த கள்ளன் இயேசுவை நோக்கி தலையைத் திருப்பினான்.

‘இயேசுவே... நீர் தேவகுமாரனானால் நீரும் விடுதலையாகி என்னையும் விடுவியும்’ என்றான்.

அப்போது அவருடைய வலப்பக்கத்தில் அறையப்பட்டிருந்தவனோ: ‘நீ இன்னும் திருந்தவில்லையா? நாம் குற்றம் செய்தோம் தண்டனை அனுபவிக்கிறோம். இவர் குற்றமே செய்யாதவர். நாம் தண்டனை பெறுவது நியாயம். ஆனால் இவர் தேவகுமாரன். தண்டனைக்குரியவரல்ல. எனவே நீ இயேசுவை இகழாதே’ என்று கூறிவிட்டு இயேசுவின் முகத்தைப் பார்த்து,

‘ஆண்டவரே, நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும்’ என்றான்.

இயேசு அவனிடம், ‘இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்’ என்றார்.

★ ★ ★

நண்பகலில் திடீரென நாடெங்கும் இருள் பரவியது. வெயில் கொளுத்த வேண்டிய நண்பகலில் நாடே இருண்டதைக் கண்ட மக்களும், தலைவர்களும் பதட்டமடைந்தார்கள். அந்த இருள் மூன்று மணி வரை நீடித்தது. தேவாலயத்தின் திரைச்சீலை நடுவில் இரண்டாகக் கிழிந்தது.

சிலுவை மரத்துக்குக் கீழே இயேசுவின் தாயார் சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கும் தன் அன்பு மகனை உயிருக்குள் இரத்தம் வழிய உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார். அவளுடைய உடலும் உள்ளமும் ஒட்டுமொத்தமாய் சோர்ந்துபோய் வலியால் துடித்துக் கொண்டிருந்தது.

சிலுவையின் கீழே மூன்று மரியாள் நின்றிருந்தார்கள். ஒன்று இயேசுவின் தாய் மரியாள். இன்னொருவர் சின்ன யாக்கோபு, யோசே ஆகியோரின் தாய் மரியாள். இன்னொருவர் மகதலேனா மரியாள். மகதலேனா மரியாளிடமிருந்து இயேசு ஏழு பேய்களை ஓட்டியிருந்தார். அதன்பின் அவள் அவருடைய சீடரானவர்.

தொடரும்...

**தெரியாத எதிர்காலத்தைத் தெரிந்த ஆண்டவரிடம் விட்டு விடு.**


கோரி டென் பூம்

**அன்புக்கு மட்டுமே, எதிரியை நண்பனாக மாற்றும் சக்தி உள்ளது.**

மார்ட்டின் லூதர் கிங் ஜூனியர்

# இயேசு கிறிஸ்துவின் ஜெபிக்கின்ற கரங்கள்


**1-40 புள்ளிகளை இணைத்து அழகான வண்ணம் தீட்டவும்.**



# யானை

‘‘ராஜாவுக்குச் சமுத்திரத்திலே ஈராமின் கப்பல்களோடேகூடத் தர்ஷீசின் கப்பல்களும் இருந்தது; தர்ஷீசின் கப்பல்கள் மூன்று வருஷத்துக்கு ஒருதரம் பொன்னையும், வெள்ளியையும், **யானைத்தந்தங்களையும்,** குரங்குகளையும், மயில்களையும் கொண்டுவரும் (1இராஜாக்கள் 10:22)’’ என யானையைக் குறித்தும், யானைத் தந்தங்களைக் குறித்தும் வாசிக்கலாம்.

யானைத்தந்தங்கள் பொன், வெள்ளி போன்ற பொக்கிஷங்களுக்கு இணையாக கருதப்பட்டுள்ளதை இவ்வசனத்தின் மூலம் தெரிந்து கொள்ளலாம்.



**யானை** பாலூட்டி (Mammals) வகையைச் சேர்ந்த ஒரு தாவர உண்ணி விலங்காகும். நிலத்தில் வாழும் விலங்குகள் யாவற்றினும் மிகப்பெரியதாகும். சிங்கம், சிறுத்தை... போன்ற வலிமையான விலங்குகளுக்கு இணையான வலிமை கொண்டது. 70 ஆண்டுகள் வரை வாழக்கூடியது.

குதிரைப் படையைப் போன்றே யானைப்படையும் பழங்காலத்தில் போர்க்காலங்களில் சிறப்பான இடத்தை வகித்து வந்தன. மா, கரி, வேழம், அத்தி, அருகு, ஆம்பல், ஆனை, யானை, இபம், இம்மடி என தமிழ் இலக்கியங்களில் பல பெயர்களால் யானை அழைக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் நீலகிரி, கோவை, ஈரோடு, திருப்பூர், தர்மபுரி, கிருஷ்ணகிரி, தேனி, கன்னியாகுமரி உள்ளிட்ட மாவட்டங்களில் யானைகள் அதிகளவில் வாழ்கின்றன.

யானையின் பெரிய காதுகள் கூர்மையான கேட்புத்திறன் கொண்டவை. பூச்சி, கொசுக்களை விரட்டவும், மென்மையான கழுத்துப் பகுதியை வெப்பம் தாக்காதவாறு காத்திடவும் விசிறிக் கொண்டே இருக்கிறது. யானைகளுக்கு பார்வைத் திறன் குறைவே. சுமார் 50 அடிகளுக்கு அப்பால் எதுவும் தெளிவாக தெரியாது. யானையால் ஓடவோ, பாயவோ, குதிக்கவோ இயலாது. வேகமான அதிகபட்சமாக மணிக்கு 40 கி.மீ. வேகத்தில் நடக்க முடியும். நடையே அதன் ஓட்டம். யானையின் சிறப்பான உறுப்பு அதன் தும்பிக்கை (Trunk). சுமார் 10 ஆயிரம் தசை வளையங்களால் அமைந்திருக்கும் தும்பிக்கை, யானைக்கு கை போன்றது. தும்பிக்கையின் உதவியால் சிறு இலைகளை கூட எடுக்க முடியும்.

யானை தந்தத்திற்கு எயிறு, தந்தம் என்ற இதர பெயர்களும் இருக்கின்றன. யானைகள் இரண்டு தந்தங்களைக் கொண்டுள்ளன. யானையின் தந்தம் ஒரு முறை உடைந்தால் மீண்டும் வளராது. ஆப்பிரிக்க யானைகள் ஆண், பெண் இரண்டுக்கும் தந்தங்கள் நீண்டு வளரும். இந்தியா, சுமத்திரா, போர்னியோ யானைகளில் ஆண் யானைகளுக்கு மட்டும் தந்தம் நீண்டு வளரும். இலங்கையில் இருபால் யானைகளுக்கும் தந்தம் வெளியே நீண்டு வளர்வதில்லை. யானையின் தந்தங்களால் யானைக்கு பல பயன்கள் உள்ளன. யானைகள் சண்டை, தற்காப்பு, தோண்டுதல், மரக்கட்டைகள் போன்ற பொருட்களைத் தூக்குவதற்கும்,

தோண்டுவதற்கும், உணவு சேகரிப்பதற்கும் அவற்றைப் பயன்படுத்துகின்றன. தந்தங்கள் சுமார் 90 கிலோ எடை கொண்டிருக்கும்.

ஆசிய, ஆப்பிரிக்க யானைகள் இரண்டும் மொத்தம் 26 பற்களை பெற்றுள்ளன. யானையின் மோப்பத்திறன் மிகக் கூர்மையாக இருப்பதால், காற்றின் திசையிலிருந்து மனிதன், மற்ற விலங்குகள். உணவு, தண்ணீர் உள்ளிட்டவற்றை அறிந்து கொள்ளும். யானைகளுக்கு சுவையுணர்வு இல்லை. இவை இலை, செடி, கொடி, மூங்கில், கரும்பு போன்றவற்றை விரும்பி உண்கின்றன. இவற்றின் செரிமானத் திறன் மிகவும் மந்தமானது. எனவே, இவை உண்பதில் 40 விழுக்காடே செரிமானம் ஆகிறது. நன்கு வளர்ந்த யானைகள் நாள் ஒன்றுக்கு 100 முதல் 300 கிலோ தாவரங்களை உண்ணும். 100 முதல் 150 லிட்டர் தண்ணீர் யானைக்கு தேவைப்படுகிறது.

கோபத்தில் யானை ஓடும் போது வால் சற்று நிமிர்ந்து கொள்ளும். அதன் மூலம் யானை கோபத்தில் இருக்கிறது என்பதை அறிந்து கொள்ள முடியும். யானைகள் பலவிதமான ஒலிகளை ஏற்படுத்துகின்றன. பிளிறுதல், கணைத்தல், இறுமுதல், கீச்சிடுதல், உறுமுதல் மற்றும் அகவொலி என சத்தங்களால் பலவித உணர்வுகளை வெளிப்படுத்துகின்றன.

வெப்பத்திலிருந்தும், பூச்சிகளிடமிருந்தும் காப்பாற்றிக் கொள்ளும் வகையில் மண்ணில் புரள்கின்றன. சேற்றை வாரிப் பூசிக் கொள்கின்றன. தண்ணீரில் குளிக்கின்றன. யானை தன் தலையிலே மண்ணள்ளிப் போட்டுக் கொள்வது என்பது நாம் நினைப்பது போல (இழிவானது) அல்ல. வெப்பத்தில் இருந்து தற்காத்துக் கொள்ளும் செயல் அது. யானைகள் நன்றாக நீச்சலடிக்கும் திறமை கொண்டவை. ஆறு, கடல் ஆகியவற்றை கடந்து நீந்திச் செல்ல முடியும். யானைகள் கூட்டமாக நாடோடிகளாக வாழும் இயல்பு கொண்டது. 15 முதல் 50 வரையிலான யானைகள் கூட்டமாக வாழும் பழக்கம் உள்ளவை. யானைகள் கூட்டத்திற்கு ஒரு முதிர்ந்த பெண் யானை தலைமை தாங்கி வழிநடத்தும்.



காட்டு யானைகளை பிடித்து கும்கி யானைகள் மற்றும் வளர்ப்பு யானைகளாக மாற்றும் பழக்கம் பல ஆண்டுகளாக வழக்கத்தில் உள்ளது. ஊருக்குள் நுழைந்த காட்டு யானைகளை பிடிக்க பழக்கப்படுத்தப்பட்ட கும்கி யானைகள் பயன்படுத்தப் படுகின்றன. முதுமலை, ஆனைமலை ஆகிய இடங்களில் வளர்ப்பு யானைகள் முகாம்களில் வனத்துறையினரால் யானைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே யானைகளை வைத்து மனிதர்கள் வேலை வாங்கியுள்ளனர். போர் செய்தல், மரம் தூக்குதல், கோவில் கட்டுமானம், விளை நிலங்களென யானைகளும் மனிதரோடு கடுமையாக உழைத்துள்ளது. இதனாலேயே, யானை இருந்தாலும் ஆயிரம் பொன், இறந்தாலும் ஆயிரம் பொன் என்பர்.

கலைப் பொருட்கள், கலை வேலைப்பாடுகள் மிகுந்த கைவினைப் பொருட்கள் போன்றவை யானைத் தந்தத்தில் செய்யப்படுகின்றன. இதனால், அதிகளவில் யானைகள் சட்ட விரோதமாக வேட்டையாடப்படுகின்றன. யானைகளின் வாழ்விடங்களை அழித்து விவசாயம் என்ற பெயரில் ஆக்கிரமிப்பது, நீர்நிலைகளை அழிப்பது, யானைகளின் வழித்தடங்களை ஆக்கிரமித்து பல்வேறு வன ஓய்வு விடுதிகள் அமைத்தல் போன்ற மனிதனின் சுயநல குணாதிசயங்களே யானைகளின் அழிவுக்கு காரணமாகி வருகின்றன.

காடுகளை ஆக்கிரமித்து விவசாயம் செய்பவர்கள் தங்கள் பயிர்களை யானைகள் அழித்துவிடாமல் இருக்க இரும்புவேலி அமைத்து அதில் மின்சாரம் பாய்ச்சி யானைகளைக் கொல்கிறார்கள். சிலர் விஷம் வைத்தும், சிலர் யானைகள் மீது வெடி மருந்துகளையோ, தீவட்டிகளை எறிந்தும் கொல்கிறார்கள்.

யானைகளின் தந்தங்கள், யானை முடி, யானையின் பல், எலும்பு போன்றவை மட்டுமல்ல அவற்றின் சிறுநீர், சாணம் கூட விற்பனைப் பொருளாக பார்க்கப்படுகிறது. மின் திட்டங்கள், இவைகளுக்காக அமைக்கப்படும் மின் வழித்தடங்கள், மற்றும் இரயில் பாதைகளும் யானைகளை கொல்லும் பெரிய காரணிகளாக விளங்குகின்றன. கடந்த 10 ஆண்டுகளில் மட்டும் ரயில்கள் மோதி கணிசமான யானைகள் இறந்துள்ளதாக வன ஆர்வலர்கள் கூறுகின்றனர்.

## உங்களுக்குத் தெரியுமா?

**பழம் தின்று கொட்டை போட்டவர் என்றால் என்ன அர்த்தம்?**

சிங்கங்களை காடுகளின் அரசன் என்று சொல்வது போல, யானைகளை காடுகளின் தந்தை என்பார்கள். ஆதிகாலம் முதல் யானைகள் தாம் பழங்களைத்தின்று தான் செல்லுமிடமெல்லாம் விதைகளைப்போட்டு காடுகளை விருத்தி செய்கின்றன. இன்றளவும் காடுகளில் புதிய தாவரங்கள் மற்றும் மரங்கள் வேறுவேறான இடங்களில் வளர்வதற்கு யானைகள் தான் காரணம். அவ்வாறாக பழம் தின்று கொட்டைகள் போட்டு காடுகளை பலுகிப் பெருகச் செய்த யானைகளை காட்டுவதற்கு பயன்படுத்தும் எடுத்துக்காட்டு தான் பழம் தின்று கொட்டை போடுவதுடன் தொடர்புடைய (saying) சொல் வழக்கு. மேலும் அவ்வாறான நபர்களை யானைகள் அளவுக்கு பலம் பொருந்தியவர் என்று பொருள்கொடுக்கும் வகையிலும் தான் ''பழம் தின்று கொட்டை போட்டவர்'' என்று அழைப்பது.


காடுகள் வளமாக இருப்பதற்கும் விதைப் பரவலுக்கும் யானைகள் முக்கிய காரணிகளாக உள்ளன. யானைகள் அழிந்தால் காடுகள் அழியும். யானைகளின் பாதுகாப்பிற்காக ஜெபித்துக் கொள்வோம்.

---

## Quiz O Quiz

யானையைக் குறித்து பரிசுத்த வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 3 வசன இருப்பிடங்களை குறிப்பிட்டு எழுதவும். விடைகளுக்கு 25ஆம் பக்கம் பார்க்க.

## இந்த யானைக்குட்டி தன் அன்புத் தாயிடம் செல்ல சரியான வழிகாட்டுங்கள்.



# உலகின் முதல் ட்ச்சுநாமி

‘என்ன சொல்லப்போகிறாரோ, கோபமாக இருக்கிறாரே! உலகம் என்ன ஆகப்போகிறதோ’ என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டிருந்த நோவாவிடம் தேவன் எனது முன்னிலையிலிருந்து மனிதர் அனைவரையும் அழித்து விடப்போகிறேன். அவர்களால் பூமியில் வன்முறை நிறைந்திருக்கின்றது. இப்பொழுது நான் அவர்களை மண்ணுலகோடு அழிக்கப் போகிறேன்.

உனக்காகக் கொப்பேர் மரத்தால் ஒரு பேழையைச் செய். அதில் அறைகள் அமைத்து அதற்கு உள்ளேயும் வெளியேயும் கீல் பூசு. 450 அடி நீளம். 75 அடி அகலம். 45 அடி உயரம். மேற்தள பரப்பளவு 97,700 சதுர அடி கொண்டதாக அந்தப் பேழையைத் தயார் செய்.

அதன் மேல் ஒரு ஜன்னலை அமைத்து, அந்த ஜன்னல் மேல்தளத்திற்கு ஒரு முழம் வெளியே தாழ்வாக இருக்கும்படி செய். பேழையின் கதவை ஒரு பக்கத்தில் அமைத்துக்கொள். கீழ்த்தளம், நடுத்தளம், மேல்தளம் என மூன்று தளங்களை அப்பேழையில் அமைத்துக்கொள்.

நான் பூமியின் மேல் மழையைப் பொழிவேன். தொடர்ந்து பெய்யும் மழையினால் வெள்ளப்பெருக்கு ஏற்படும். அதனால் பூமியில் உள்ளவையெல்லாம் மடிந்துபோம்.

உன் புதல்வர், உன் மனைவி, உன் புதல்வரின் மனைவியர் ஆகியோருடன் நீ அந்தப் பேழைக்குள் செல். உன்னுடன் உயிர் பிழைத்துக்கொள்ளுமாறு, சதையுள்ள எல்லா உயிரினங்களிலிருந்தும் வகைக்கு இரண்டாக அப்பேழையில் நிரப்பு. அவை ஆணும்



பெண்ணுமாக இருக்கட்டும். வகை வகையான பறவைகள், கால்நடைகள், நிலத்தில் ஊர்வன ஆகியவற்றிலிருந்து வகைக்கு இரண்டு உயிர் பிழைத்துக்கொள்ள உன்னிடம் வரட்டும். உண்பதற்கான எல்லா வகை உணவுப் பொருள்களையும் நீ எடுத்துச் சென்று சேர்த்து வைத்துக்கொள். அவை உனக்கும் அவற்றிற்கும் உணவாகட்டும்'' என்று தேவன் சொன்னார்.

நோவா எல்லாவற்றையும் அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்தானே ஒழிய மனம் படபடத்துக் கொண்டே திகிலோடே இருந்தான். தேவன் பேசிய வார்த்தைகளில் இருந்த உண்மை நிலையையும் தீர்மானத்தையும் அறிந்ததால் எதுவும் பேசாமல், ''நீங்கள் கட்டளையிட்டபடியே எல்லாவற்றையும் செய்கிறேன்'' என்று சொல்லி தேவனுக்கு முன்பாக பணிந்து நின்றான்.

எல்லாவற்றையும் செய்கிறேன் என்று நோவா தேவனிடம் சொல்லிவிட்டாலும் அவனுடைய மனம் முழுவதும் 'ஐயோ எல்லா மக்களும் அழியப்போகிறார்களே' என்ற கலக்கத்துடனேயே இருந்தது. ஒருவருடனும் பேசாமல் தேவன் சொன்ன வார்த்தைகளையே நினைத்துக்கொண்டிருந்தான். இரவில் தூக்கம் வராமல் உட்கார்ந்தபடியே யோசித்துக் கொண்டிருந்தான். இதை கவனித்த நோவாவின் மனைவி ''என்னங்க தூங்கலியா? ஏன் இப்படியே உட்காந்திருக்கீங்க. என்ன உடம்பு சரியில்லையா?'' என்று தொட்டுப்பார்த்தாள். அதெல்லாம் ஒன்னும் இல்லம்மா, உடம்பெல்லாம் நல்லாத்தான் இருக்கிறது. மனசுதான் சரியில்லை'' என்றான்.

''என்னன்னு சொன்னாதாங்க உங்க மனசுல இருக்கிற பாரம் குறையும் நீங்களே மனசுக்குள்ள வச்சு யோசிச்சுக்கிட்டு இருந்தா இன்னும் அதிகமாகத்தான் செய்யும். என்னிடம் சொல்லலாம்ல?'' என்று கேட்டதும், நோவா தேவன் தன்னிடம் பேசின எல்லாவற்றையும் தன் மனைவியிடம் சொல்ல ஆரம்பித்தான். அதையெல்லாம் கேட்டதும் நோவாவின் மனைவி அதிர்ச்சியில் உறைந்தே போய்விட்டாள்.

சிறிது நேரத்திற்கு பின்பு சுதாரித்துக்கொண்டவளாக ''நீங்க சொல்லுவது எல்லாம் உண்மையாங்க. உண்மையாகவே தேவன் உங்களிடம் இப்படி பேசினாரா?'' என்று கேட்டு நோவாவின் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

''தேவனே நேரடியாக என்னிடம் பேசினார்மா. இந்த அழிவில் இருந்து தப்பித்துக்கொள்ள வேண்டும் என்றால் உடனடியாக பேழையை செய்யும்படியாகவும், அது எந்த அளவில் இருக்க வேண்டும் என்றும் மிகவும் தெளிவாக தேவன் என்னிடம் பேசியிருக்கிறார்'' என்று நோவா சொன்னதும் ''இதற்கு வேறு வழியே இல்லையா? எல்லா மக்களும் அழிந்துதான் போக வேண்டுமா?'' என்று தழுதழுத்த குரலில் கேட்டாள்.

''வழி இருக்கிறது, அந்த அழிவில் இருந்து தப்பிக்க ஒரு வழி இருக்கிறது. அதுதான் நாம செய்யப்போகிற பேழை. அந்த பேழைக்குள் இருந்தால் அந்த அழிவில் இருந்து தப்பித்துக்கொள்ள முடியும். இனி வேறு வழியில்லை. நம்மோடு சேர்ந்து எவ்வளவு பேர் பேழைக்குள் வருகிறார்களோ அவர்கள் அழிவில் இருந்து பாதுகாக்கப்படுவார்கள். நம்மால் முடிந்தவரை இதை எல்லோரிடத்திலும் சொல்வோம். தேவனின் வார்த்தைகளை நம்புகிறவர்கள், விசுவாசிக்கிறவர்கள் கட்டாயம் தப்பித்துக்கொள்ள முடியும் என்று நோவா சொன்னான்.

''நல்லதுங்க இனி நம்முடைய வேலையே அந்த அழிவில் இருந்து மக்கள் விடுவிக்கப்படுவதற்காக தேவன் பேசின வார்த்தைகளை எல்லாம் மக்களிடமே சொல்லுவதுதான்'' என்று நோவாவின் மனைவி சொன்னதும் ''நானும் இதைத்தான்


நினைத்தேன் அப்படியே செய்யலாம். சரி நேரம் ஆகிவிட்டது. தூங்கலாம். நாளை எழுந்ததும் முதலில் நமது பிள்ளைகளிடம் இது குறித்துச் சொல்ல வேண்டும் என்று சொல்லி இருவரும் படுக்கைக்கு சென்றனர்.

நோவா பேழை செய்வதற்கான ஆயத்த வேலையில் ஈடுபட ஆரம்பித்தான். நோவாவின் மனைவி இரவில் நோவா சொன்ன எல்லாவற்றையும் தன் மகன்களிடமும் மருமகள்களிடமும் சொல்லிவிட்டாள். அதைக் கேட்டதும் பிள்ளைகளுக்கும் அதிர்ச்சி! ஆனால் பேழைக்குள் இருப்பவர்களுக்கு எந்த பாதிப்பும் இருக்காது என்று தெரிந்ததும், ‘எல்லா மக்களும் பேழைக்குள் வரவேண்டுமே, அவர்கள் வருவார்களா?’ என்று அவர்களுக்குள்ளாகவே பேசிக்கொண்டார்கள்.

நோவா தனது மனைவியை அழைத்து, ‘‘பேழை செய்வதற்கு வேண்டிய மரங்களை தேடிப் பார்த்துவிட்டு வருகிறேன்’’ என்றான். ‘‘அவ்வளவு பெரிய பேழையை எப்படி கட்டுவீங்க. நினைத்து பார்க்கவே முடியவில்லை. இதை கட்டுவதற்கு நிறைய தேவைகள் இருக்குமே, அதற்கு என்ன செய்யப்போகிறோம்? சரி தேவன் உங்களுக்கு துணையாக இருக்கிறார். தேவனால் செய்ய முடியாதவைகள் என்ன இருக்கின்றன என்று நீங்கள் சொல்லும் வார்த்தைகள்தான் இப்போது எனக்கு ஞாபகத்திற்கு வருகிறது. போய் வாருங்கள்’’ என்று சொல்லியனுப்பினாள்.

‘இந்தப் பேழையைச் செய்வதற்கு பல நாட்கள் ஆகும். பேழையை கட்டிக்கொண்டே தேவன் பூமியை அழிக்கப்போகும் செய்தியை மக்களுக்கு சொல்லி, மக்களை பேழைக்குள் கொண்டு வந்து விட வேண்டும்’ என்று நினைத்துக்கொண்டே நோவா நடந்து கொண்டிருந்தான். சிறிது தூரம் சென்றதும் மக்கள் எல்லோரும் கூடுகிற சந்தை வெளியில் எப்போதும் இல்லாத அளவிற்கு மக்கள் கூட்டம் நிறைந்து காணப்பட்டது. அந்த வேளையிலும் ஒருவரை ஒருவர் அடித்துக்கொண்டும், சண்டையிட்டுக்கொண்டும் ஒரே கூச்சலும் குழப்பமாகவே காணப்பட்டது. மக்களின் அநீதியான செயல்கள் நாளுக்கு நாள் பெருகி கொண்டுதான் இருந்ததே ஒழிய குறைந்ததாக தெரியவில்லை.

தொடரும்...




அப்பொழுது தகப்பன் தன் ஊழியக்காரரை நோக்கி: நீங்கள் உயர்ந்த வஸ்திரத்தைக் கொண்டுவந்து, இவனுக்கு உடுத்தி, இவன் கைக்கு மோதிரத்தையும் கால்களுக்குப் பாதரட்சைகளையும் போடுங்கள். (லூக்கா 15:22)

# நோவாவின் பேழை தொடர்புடைய சொற்களை கண்டு வட்டமிடுக.

பேழை
வெள்ளம்
நோவா
ஜோடு
காகம்
முழம்
தண்ணீர்
வானவில்



காம்
சேம்
யாப்பேத்
புறா
பெருமழை
உடன்படிக்கை
மாம்ச ஜந்துக்கள்
ஒலிவ இலை

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நோ | வா | பே | பு | றா | ரு | ந் | ன | மா | வெ |
| ந் | கா | ழை | ஜோ | டு | ஒ | பெ | வா | ம் | ள் |
| ன | க | து | ள | ண் | லி | வி | லை | ச | ள |
| வா | ம் | லி | ரு | யா | வ | க் | ரு | ஜ | ம் |
| வி | த | ண் | ணீ | ர் | இ | கா | றா | ந் | கா |
| பெ | ரு | ம | ழை | கா | லை | ழ | ஜோ | து | ள |
| ள | ந் | வா | ன | வி | ல் | கா | ம் | க் | சே |
| ம் | உ | ட | ன் | ப | டி | க் | கை | க | ம் |
| யா | ப் | பே | த் | வி | மு | ழ | ம் | ள் | ரு |

# விசுவாசம் (Faith)

அந்திரேயா இயேசுவின் பன்னிரண்டு சீஷர்களில் முதலில் இயேசுவோடு இணைந்தவர். முதலில் இவர் யோவான் ஸ்நானனின் போதனைகளினால் ஈர்க்கப்பட்டு அவர் தான் மேசியா என்னும் எண்ணத்தில் அவருடைய சீடரானவர். பின் யோவான் ஸ்நானனே இயேசுவைச் சுட்டிக்காட்டி அவரே உண்மையான தேவன் என்று சொன்னதால் இயேசுவோடு இணைந்தவர். இயேசுவை நம்பி அவரோடு இணைந்த முதல் சீடர் என்னும் பெருமை இவருக்கு உண்டு.

அந்திரேயா கலிலேயாவிலுள்ள பெத்சாயிதா என்னும் ஊரில் பிறந்தவர். அந்திரேயா தான் இயேசுவின் சீடர்களில் முக்கியமானவரான பேதுருவை இயேசுவிடம் அழைத்து வந்தவர். அந்த பேதுரு அந்திரேயாவின் சகோதரன். இருவரும் மீன்பிடி தொழிலைச் செய்து வாழ்க்கை நடத்தி வந்த வேளையில் தான் மீட்பரைக் குறித்து கேள்விப்பட்டு மேசியாவுக்கான தேடுதலில் ஈடுபட்டார்கள்.

இன்றைய ஜார்ஜியாவிலுள்ள காக்கசீய மலையடிவாரத்தில் அந்திரேயா பணி செய்யச் சென்றார். அங்குள்ள மக்களுக்கு இயேசுவைப் பற்றிப் போதிக்கத் துவங்கினார். அங்கே இயேசுவைப் பற்றிப் போதிப்பது அவருக்கு எளிதாக இருக்கவில்லை. இயேசு யார் என்பதே அறிந்திராத மக்களுக்கு முதலில் அவரைப் பற்றிய அறிமுகமும் தேவைப்பட்டது. அந்திரேயா பொறுமையாய் மக்களைச் சேர்த்தார். மக்களிடம் கிறிஸ்தவ மதத்தை



விளக்கினார். அங்குள்ள மக்களிடம் சில காலம் பணியாற்றியபின் அங்கிருந்து இஸ்தான்புல்லுக்குச் சென்றார்.

இஸ்தான்புல் அப்போது பைசாண்டியம் என்னும் பெயரில் அழைக்கப்பட்டது. அங்கே அவருக்கு மிகப்பெரிய சவால்கள் காத்திருந்தன. மக்கள் யாரும் அவரை ஏற்றுக் கொள்ளவில்லை. அங்குள்ள அரசாங்கம் அவரைச் சிறையில் அடைத்தது. அந்திரேயா எதற்காக நாட்டுக்கு வந்திருக்கிறார், அவருடைய எண்ணம் என்ன என்பதைக் குறித்து அரசாங்கம் தீவிரமாக ஆலோசித்து வந்தது.

'மனம் திரும்பி நற்செய்தியை நம்புங்கள்' என்று அந்திரேயா முழங்கினார். அரசாங்கம் அவரை எச்சரித்தது. 'இயேசு நேற்றும், இன்றும் என்றும் மாறாதவர்' என்று முழங்கினார். அவரை மக்கள் கல்லால் எறிந்தார்கள். ஆனாலும் அந்திரேயா சளைக்கவில்லை. தன்னுடைய கொள்கையில் உறுதியாக இருந்தார்.

இயேசுவோடு பணியாற்றிய காலத்தில் பெரும்பாலும் இவருடைய பெயர் குறிப்பிடப்பட்டதே இல்லை. இயேசு ஐந்து அப்பத்தை ஐயாயிரம் பேருக்குப் பகிர்ந்து அளிப்பதற்குக் காரணமான சிறுவனை அழைத்து வந்ததாக அந்திரேயாவின் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மற்றபடி அந்திரேயா எந்தவிதமான முக்கியப் பணிகளையும் செய்ததாக பரிசுத்த வேதாகமம் சொல்லவில்லை. ஆனால் இப்போது உறுதியாக கண்காணாத தூரத்தில் கல்லடிபட்டும் பணியாற்றுகிறார்.

அந்திரேயா கிரீஸ் நாட்டிற்குப் பலமுறை பயணம் செய்தார். ஒருமுறை அவர் கிரீஸ் நாட்டிற்குப் பயணம் செய்து பட்ரேஸ் என்னும் நகரை வந்தடைந்தார். அங்கு அவர் ஏராளமான அற்புதங்களைச் செய்தார். பலரைக் குணமாக்கினார். யாரைக் குணமாக்கினாலும், இயேசு உனக்குச் சுகமளித்தார் என்று சொல்வதை வழக்கமாய்க் கொண்டிருந்ததால் இயேசுவின் பெயர் அங்கே பரவத் துவங்கியது.

அங்கே ஒரு ரோம ஆளுநர் இருந்தார். அவருடைய பெயர் ஏஜியேட்ஸ். அவருடைய மனைவி மேக்ஸ்மில்லா ஒருமுறை உடல்நிலை சரியில்லாமல் இருந்தார். அவரை அந்திரேயா குணப்படுத்த அவள் கிறிஸ்துவை நம்பும் கூட்டத்தில் சேர்ந்தாள். ஏஜியேட்ஸ் இதை வெறுத்தான். அந்திரேயாவை விரைவில் நாடு கடத்த வேண்டும் என்று தீர்மானித்தான். ஆனால் அவனுடைய சகோதரன் ஸ்ராட்டோக்லிஸ்ம் அந்திரேயாவுடன் சேர்ந்தார். அவரையே அந்திரேயா அந்த நாட்டின் கிறிஸ்தவ மதத்தலைவராக நியமித்தார். ஏஜியேட்ஸ் இதனால் பெரிதும் எரிச்சலடைந்தான்.

அவன் அந்திரேயாவை அழைத்தான். 'நீ.. இந்த நாட்டை விட்டு உடனே வெளியேறவேண்டும். மக்களிடையே பிளவுபடுத்தும் நடவடிக்கையை நீ செய்து வருகிறாய். அது ஒத்துக்கொள்ளக்கூடியதல்ல. எனவே நீ உடனடியாக வெளியேற வேண்டும்' என்றான்.

'நான் பிரிவினை உண்டாக்க வந்தேன் என்பது நீங்கள் சொல்வது. நான் உண்மையைப் பற்றியும், அறிந்தவற்றைப் பற்றியும் உலகிற்குச் சொல்லவே வந்திருக்கிறேன்.' இந்த உண்மையை அறிய நீங்கள் பாக்கியம் செய்திருக்க வேண்டும்' அந்திரேயா சாந்தமாய்ச் சொன்னார்.


ஏஜியேட்ஸ் எரிச்சலடைந்தான்.

தொடரும்...

# முதலில் ஆண்டவரோடு...

அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கனைப் பற்றி அறியாதவர்கள் யாரும் இருக்க முடியாது. அமெரிக்காவின் 16ஆவது ஜனாதிபதியாக இருந்தவர் இவர். அந்நாட்களில் ஒரு நாள் அதிகாலையில் மூத்த அரசு அலுவலர்கள் அவரை பார்த்து ஒரு முக்கியமான காரியத்தில் அவருடைய ஆலோசனையை பெறும்படி சென்றிருந்தார்கள். அவரது அறையின் அருகில் சென்ற போது அவர் யாருடனோ பேசி கொண்டிருந்தது போல் பேச்சு குரல் கேட்டது, ஆகவே இவரை தொந்தரவு செய்ய மனமில்லாமல் அவர் வரும் வரை பக்கத்து அறையில் காத்திருந்தனர்.

வெகு நேரம் கழித்து ஆபிரகாம் லிங்கன் வெளியே வந்தார். 'ஐயா நாங்கள் காலை 5 மணிக்கே வந்து விட்டோம். நீங்கள் யாருடனோ பேசி கொண்டிருந்தீர்கள். ஆகவே காத்திருந்தோம்' என்றனர். 'வேறு யாருமல்ல, நான் ஆண்டவரோடு பேசி கொண்டிருந்தேன்' என்று ஆபிரகாம் சொன்னவுடன் அவர்களுக்கெல்லாம் பெரிய ஆச்சரியம்! அவர்களது வியப்பை கண்ட ஆபிரகாம் சிறிது விளக்கம் அளித்தார். 'நான் சிறு பையனாக இருக்கும் போது காடுகளில் விறகு வெட்டி ஜீவனம் செய்து வந்தேன். என் பாட்டி தான் என்னை பராமரித்து வந்தார்கள். அவர்கள் எனக்கொரு வேதத்தை கொடுத்து ஒவ்வொரு நாள் அதிகாலையிலும் எழுந்தவுடன் அதை தியானிக்க வேண்டும் என்றும், ஆண்டவருடன் மாத்திரமே முதலில் பேச வேண்டும் என்றும் கூறினார்கள். அந்த பாடத்தை இன்னும் விட்டு விடாமல், முதலில் ஆண்டவருடன் நான் பேசுகிறேன்' என்றார். அனைவரும் ஆச்சர்யமுடன் பார்த்து வியந்தனர்.




தேவ பிள்ளைகளே, நாம் முதலில் யாரோடு பேசுகிறோம்?

அதிகாலை ஜெபம் தான் கிறிஸ்தவனின் பலன், அதிகாலை ஜெபம் தான் கிறிஸ்தவனை வல்லமையாக்கும்.


அமெரிக்காவின் கெண்டக்கியில் ஓர் ஏழை குடும்பத்தில் பிறந்து வளர்ந்த ஆபிரகாம் லிங்கன், சிறு வயதிலிருந்தே அதிகாலையில் முதலில் தேவனோடு பேசுவதை வழக்கமாக வைத்திருந்தார். தேவன் அவரை அமெரிக்காவின் ஜனாதிபதியாக உயர்த்தினார்.

தாவீது அதிகாலையில் ஜெபித்ததாக (சங்கீதம் 63:1)இல் வாசிக்கிறோம். ஆடு மேய்த்துக் கொண்டிருந்த தாவீதை தேவன் இராஜாவாக உயர்த்தினார்.


# இதுதான்டா சர்ஜிக்கல் ஸ்டிரைக்
## (துல்லிய தாக்குதல்)





தேவனே, ஜனங்கள் உம்மைத் துதிப்பார்களாக; சகல ஜனங்களும் உம்மைத் துதிப்பார்களாக. பூமி தன் பலனைத் தரும், தேவனாகிய எங்கள் தேவனே எங்களை ஆசீர்வதிப்பார். - சங்கீதம் 67:5-6




அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள். - 1 பேதுரு 5:7




ஏனெனில், காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள்,
காணப்படாதவைகளோ நித்தியமானவைகள். - 2 கொரிந்தியர் 4:18




நீங்கள் அமர்ந்திருந்து, நானே தேவனென்று அறிந்துகொள்ளுங்கள்;
ஜாதிகளுக்குள்ளே உயர்ந்திருப்பேன், பூமியிலே உயர்ந்திருப்பேன். - சங்கீதம் 46:10

# பர்திமேயு


கண் பார்வையில்லாதவனான பர்திமேயு எரிகோவின் சாலையருகே உட்கார்ந்து தர்மம் எடுத்துக் கொண்டிருந்தான், சில இரக்ககுணமுள்ள மக்கள் கொஞ்ச காசையோ, அல்லது கொஞ்ச உணவையோ அந்த வழியாக கடந்து செல்லும் போது கொடுத்திருக்க வாய்ப்பிருக்கிறது. பார்வையில்லாததினால் பர்திமேயுவினால் வேலை செய்ய முடியவில்லை. அவனால் பிச்சையெடுக்க மாத்திரம்தான் முடிந்தது.

ஒரு நாள், அந்த நெடுஞ்சாலை மிகவும் சுறுசுறுப்பாயிருந்தது. அநேகர் கடந்து செல்லுகிற சத்தம் பர்திமேயுக்கு கேட்டது. ஏதோ விசித்திரமானதொன்று நடைபெறுகிறது. சீக்கிரமாகவே அந்த மனிதன் தெரிந்துகொண்டான்.

நசரேயனாகிய இயேசு அந்த நகரத்திற்கு வந்திருந்தார். அவருடைய பிரசங்கத்தைக் கேட்பதற்காக, ஜனங்கள் கூட்டமாய் கூடியிருந்தார்கள்.

''இயேசுவே, தாவீதின் குமாரனே, என் மேல் இரக்கமாயிரும்!'' என்று பர்திமேயு அழுது கூப்பிட்டான். இயேசுவால் அவனுக்கு உதவி செய்ய முடியுமென நம்பினான்.

இயேசு மற்றவர்களை சுகமாக்கியிருக்கிறார் என்று அவன் கேள்விப்பட்டிருக்கலாம். காது கேட்காதவர்கள், வாய் பேச முடியாதவர்கள், நடக்க முடியாதவர்கள், பார்வையில்லாதவர்கள் போன்றோரை இயேசு சுகப்படுத்தியதை அறிந்திருக்கலாம். ''தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும்'' என்று பர்திமேயு மறுபடியும், மறுபடியும் கூப்பிட்டான். அவனுடைய சத்தம் நம்பிக்கையுடன் தொனித்தது.



பர்திமேயு ஒன்றைக்குறித்து நிச்சயமாயிருந்தான், இப்போது உதவியைப் பெற்றுக்கொள்ளவில்லையானால், இன்னும் ஒரு தருணம் கிடைக்காமற்போய்விடும், அந்த வழியாக இயேசு இனி ஒரு போதும் வராமற்போய்விடலாம்.

பர்திமேயு எப்படியாகிலும் இயேசுவிடம் செல்லவேண்டும். ஆனால் ஜனங்கள் நகரவில்லை. ''ஸ்ஸ்ஸ்!'' அவர்கள் சொன்னார்கள். அவன் அமைதியாக இருக்க எச்சரித்தார்கள்.

ஆனால் பரிதிமேயு அமைதியாக இருக்கவில்லை. அவன் சத்தமிட்டுக் கூப்பிட்டுக் கொண்டேயிருந்தான். திடீரென இயேசு நின்றார்! கவனித்துக்கேட்டார்! பர்திமேயுவை தன்னிடம் கொண்டுவரும்படி கட்டளையிட்டார்!

''திடன் கொள்'' ஜனங்கள் பர்திமேயுவிடம் சொன்னார்கள். ''எழுந்திரு. அவர் உன்னை அழைக்கிறார்.''

தன்னுடைய வஸ்திரங்களை எறிந்துவிட்டு, பர்திமேயு எழுந்து இயேசுவிடம் சென்றான்.

''நான் உனக்கு என்ன செய்ய வேண்டும்?'' என கேட்டார் இயேசு.

பர்திமேயு இயேசுவிடம் பொன்னோ அல்லது அழகான வஸ்திரங்களையோ கேட்கவில்லை. தேவனுடைய அழகான படைப்புகளான மரங்களையும், பறவைகளையும் பார்க்க விரும்பினான்.

''ஆண்டவரே, நான் பார்வையடைய வேண்டும்'' என்றான்.

அவன் பார்க்க விரும்பியது எதற்கு என்றால் தான் தர்மம் எடுக்காமல், தன்னைத்தானே கவனித்துக்கொள்ள விரும்பினான்.

பின்பு இயேசு பர்திமேயுவைப் பார்த்து சொன்னார்: ''உன் பார்வையை பெற்றுக்கொள். உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது.''

உடனே அவன் பார்வை பெற்று, இயேசுவை பின்பற்றி சென்றான். அவனால் சொல்ல முடிந்தது என்னவென்றால் ''தேவன் அற்புதமானவர்! அவர் என்னை சுகப்படுத்தினார்!'' பர்திமேயுக்கு அது ஒரு ஆச்சரியமான வேளையாயிருந்தது.

எல்லோரும், அதைப் பார்த்தபோது, தேவனுக்கு துதி செலுத்தினார்கள். மறுபடியும் ஒருமுறை, தேவனின் குமாரனாகிய, இயேசுவின் அற்புதமான வல்லமையை, ஒரு எளிய பார்வையில்லாத மனிதனுக்கு பார்வையை கொடுத்ததின் மூலம் கண்டுகொண்டார்கள்.

## ஆதியாகமம் - கேள்வி பதில்கள்

1. இவன் நிமித்தமாக பூமி சபிக்கப்பட்டது - இவன் யார்?
2. தந்திரக்காரனாகிய ஒருவன் சாபம் வாங்கினான் - அவன் யார்?
3. கர்த்தரை நோக்கி கூப்பிட்ட இரத்தம் யாருடையது?
4. பூமியில் அதிகநாட்கள் உயிர்வாழ்ந்த மனிதன் யார்?
5. காணப்படாமல், எடுத்துக்கொள்ளப்பட்ட மனிதன் யார்?

பதில்: 1. ஆதாம் (3:17), 2. சர்ப்பம் (3:1,14,15), 3. ஆபேல் (4:10), 4. மெத்தூசலா (5:27), 5. ஏனோக்கு (5:24)

# என்னை நம்பும்

பில்லிகிரகாம் இளம் வயது வாலிபனாக இருந்தபோது, தேவனுக்காக எதையாவது செய்ய வேண்டும் என்ற ஆர்வம் உடையவராக இருந்தார். ஒரு நாள் தன் நண்பர்களோடு கால்பந்து விளையாடச் சென்றார். விளையாடிக் கொண்டிருந்த நேரத்திலும் அவர் உள்ளம் தேவனோடு உறவாடிக் கொண்டிருந்தது. கர்த்தர் பில்லிகிரகாமின் உள்ளத்தில் உலகத்திலுள்ள மற்ற வாலிபர், வயோதிகர், சிறியோர், பெரியோரின் ஆத்தும தேவைகளைப் பற்றி பேசிக் கொண்டிருந்தார்.

விளையாட்டு முடிந்தது. நண்பர்கள் எல்லோரும் அவரவர் தம்தம் வீட்டிற்கு சென்று விட்டார்கள். ஆனால் பில்லிகிரகாமோ, அந்த கால்பந்து மைதானத்திலே முழங்கால்படியிட்டார். கண்களிலிருந்து தாரை தாரையாய் கண்ணீர் ஓடிக் கொண்டிருந்தது.

‘ஆண்டவரே என்னை நம்பும், என்னை நம்பும், உமது பார்வையிலே என்னை நம்பிக்கைக்குரியவனாக்கும்’ என்று கதறினார். அந்த வார்த்தைகளே அவரது ஜெபமாக இருந்தது. அவரது உள்ளம் தேவனிடத்தில் கெஞ்சிக் கொண்டிருந்தது, ஏறத்தாழ நான்கு மணி நேரம் மிகுந்த சத்தத்தோடு ஜெபித்தார், ‘ஆண்டவரே என்னை நம்பும்’ என்பதுதான் அவரது ஜெபமாக இருந்தது. கர்த்தருடைய ஆவியானவர் வல்லமையாக இறங்கி அவரை அபிஷேகித்தார். அன்றிலிருந்து கர்த்தர் ஒரு பெரிய திருப்பத்தை அவர் வாழ்வில் கட்டளையிட்டார். மாபெரும் விளையாட்டு வீரரான அவரை மாபெரும் சுவிசேஷ வீரனாக மாற்றினார்.



**Quiz O Quiz**

12ஆம் பக்க யானையைக் குறித்த வசனங்கள்

1 இராஜாக்கள் 10:22, 2 நாளாகமம் 9:21, உன்னதப்பாட்டு 5:14, உன்னதப்பாட்டு 7:4, எசேக்கியேல் 27:6, எசேக்கியேல் 27:15, ஆமோஸ் 3:15

# எங்கள் பேங்க் அக்கவுண்ட் நம்பர்!

நாங்கள் Bank of Baroda-களில் வங்கியில் இரண்டு கணக்குகள் வைத்துள்ளோம். செக் அல்லது டிராப்ட் என்னுடைய பெயருக்கு எடுத்து அனுப்புவதாக இருந்தால், எங்களது அலுவலக முகவரிக்கு ரிஜிஸ்டர் தபால் அல்லது கொரியர் மூலமாக அனுப்புங்கள். வங்கிக் கணக்கின் (Account) விபரம்:

| | | |
|---|---|---|
| 1. ACCOUNT NAME | : | **MR. JOSEPH OSBORNE JEBADURAI** |
| ACCOUNT NO. | : | 49 510100003062 |
| 2. ACCOUNT NAME | : | **ANTANTULLA APPAM TRUST** |
| | | ACCOUNT NO. : 49 510200000122 |
| BANK NAME | : | **BANK OF BARODA** |
| IFSC CODE | : | BARB0KODAMB (5TH CHARACTER IS ZERO) |
| SWIFT CODE | : | BARBINBB |
| BRANCH & CODE | : | UNITED INDIA COLONY, KODAMBAKKAM & 4951 CHENNAI – 600 024. |

**APPAM - GOOGLE PAY : 98406 95296**

## அன்றன்றுள்ள அப்பம் வாசகர்களுக்கு!

### ஏலிம் சபைக்கு காணிக்கை அனுப்ப!

ஏலிம் சபைக்கு காணிக்கையோ, தசமபாகமோ அனுப்ப கர்த்தர் உங்களை ஏவுவாரானால், கீழ்க்கண்ட வங்கிக் கணக்குகளை பயன்படுத்துமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

| | | |
|---|---|---|
| ACCOUNT NAME | : | **ELIM GLORIOUS REVIVAL CHURCH** |
| ACCOUNT NO. | : | 49510100000230 |
| ACCOUNT NAME | : | **MR. JOSEPH OSBORNE JEBADURAI** |
| ACCOUNT NO | : | 49510100003063 |
| BANK NAME | : | BANK OF BARODA |
| IFSC CODE | : | BARB0KODAMB (5TH CHARACTER IS ZERO) |
| BRANCH | : | KODAMBAKKAM CHENNAI - 600024 |

**ELIM - GOOGLE PAY : 98848 77607**


ஏலிம் மகிமையான எழுப்புதல் தேவாலயம்
கர்த்தாவே, உம்முடைய வழிகளை எனக்குத் தெரிவியும்; உம்முடைய பாதைகளை எனக்குப் போதித்தருளும். - சங்கீதம் 25:4
மாதாந்திர
முழு இரவு
ஜெபம்
ஒவ்வொரு மாதமும்
இரண்டாவது வெள்ளிக்கிழமை
இரவு 9.30 மணிமுதல் 2.00 மணிவரை
அபிஷேகம் நிறைந்த ஆராதனை
வல்லமையான ஜெபம்
சத்திய வார்த்தை
Pastor
OSBORNE
JEBADURAI
ஏலிம் மகிமையான எழுப்புதல் தேவாலயம்
No.50,இரயில்வே ஸ்டேஷன் ரோடு,
கோடம்பாக்கம்.044 24840407 / 9003067777
முடிவிலே வாகன வசதி உண்டு


ஏலிம் மகிமையான எழுப்புதல் தேவாலயம்
கர்த்தாவே, உம்மைத் தேடுகிறவர்களை நீர் கைவிடுகிறதில்லை - சங்கீதம் 9:10
மாதாந்திர பரிசுத்த ஆசீர்வாத
உபவாச
ஜெபம்
ஒவ்வொரு மாதமும்
நான்காவது சனிக்கிழமை
காலை 9 மணிமுதல்
மதியம் 2 மணிவரை
அபிஷேகம் நிறைந்த ஆராதனை
வல்லமையான ஜெபம்
சத்திய வார்த்தை
Pastor
OSBORNE
JEBADURAI
ஆசிர்வாதமான மதிய உணவு உண்டு
ஏலிம் மகிமையான எழுப்புதல் தேவாலயம்
No.50,இரயில்வே ஸ்டேஷன் ரோடு,
கோடம்பாக்கம்.044 24840407 / 9003067777

பூமியின்மேல் அக்கினியைப் போட வந்தேன், அது இப்பொழுதே
பற்றி எரியவேண்டுமென்று விரும்புகிறேன். லூக்கா 12:49

அன்றன்றுள்ள அப்பம் ஊழியங்கள் நடத்தும்

# 42 வது திருப்பத்தூர்

# விடுதலை அக்கினி அபிஷேக முகாம்



Ps. ஆஸ்பார்ன் ஜெபத்துரை | Bro.G.P.S. ராபின்சன் | Bro. எபிநேசர் பால்
Ps. மனோ தர்மலிங்கம் | Ps. லூகாஸ் சேகர் | Sis. எலிசபெத் ராஜ்குமார்

**MAY 16-18 2024**

நேரம்
வியாழன்
காலை 6:00 மணி முதல்
சனிக்கிழமை
மதியம் 1 மணி வரை

- அபிஷேகம் நிறைந்த ஆராதனை
- வல்லமையான ஜெபம்
- சத்திய வார்த்தை

பதிவு கட்டணம்
₹200

SCAN HERE

இடம்
**அன்றன்றுள்ள அப்பம் ஜெப மண்டபம்**
கிறிஸ்துகுல ஆசிரமம், திருப்பத்தூர் மாவட்டம் வேலூர் அருகில்
தொடர்புக்கு: 044 24840407, 9003067777

மூன்று வேளையும் உணவு வழங்கப்படும்
தங்குமிடம் முன்பதிவிற்கு
9884915777 | 9003067777

If indelivered please return to:

**Elim Glorious Revival Church**

#50, Railway Station Road, Kodambakkam, Chennai - 600024, India
for 24x7 Prayer 91-9444322200, 9444322211 Email: enquiry@elimgrc.com, website : www.elimgrc.com